முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1064

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

28.08.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்காரமே ஞான சூட்சுமமே
ஓங்காரக்குடில் படைத்த மாதவபலமே
ஓங்காரன் உந்தனுக்கு இனிதே
உரைத்திடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 12 நாள், 28.08.2022 ஞாயிற்றுக்கிழமை)
2. ஆசிதனை அரங்க மகானுக்கு
ஆற்றல்கூட சுபகிருது வேங்கை திங்களில் உரைப்பேன்
வகைபட அரங்கன் சக்திகொண்டே
வையகத்தை ஆறுமுகன் யான் இனிதே மாற்றுவேன்
3. மாற்றம் தரவே பிரணவக்குடில் படைத்து மக்களுக்கு அருளமுது வழங்கி வர
ஆற்றல் அறிந்து உலகோர் அரங்கன் பால் சரணடைவுகாண
மாற்றம் இந்த பேருலகம் சடுதி காணும்
மக்களெல்லாம் அரங்கன் வழி ஞானிகளாகி மரணத்தை வெல்லும் பேராற்றல் கூடி
4. கூடியே உலகமாற்றம் என்கின்ற
குறையில்லாத ஞான ஆட்சிக்காலத்தை
தடையற உலகோர் கண்டடைந்து
தவராஜன் வழி பேரானந்தகதி அடைய நேரும்
5. நேர்மைகொண்டு அரங்கன் திருவடி பற்றி
நிலவுலகோர் தொடருவதே உயர் ஞானமாகும்
வறுமை பிற பிணி துன்பமனைத்தும்
வையகத்தை விட்டு இதனால் அகன்றோடி
6. அகன்றோடி பெரும் பாதுகாப்பு
அகிலத்துக்கு மிகுதியாக உருவாகி
ஜெகமே ஞான ஆட்சிக்காலத்தை
செப்பிடுவேன் அரங்கன் தயவால் அடையக்கூடும்
7. கூடவே அரங்கனுள் யானிருந்து குருவாக உலகுக்கு அருள்புரிய
நாடெங்கும் உள்ள மக்களெல்லாம் ஞானம் பெற அரங்கனை தேடி வர
தேடி வர பேருலக மாற்றம்
தெய்வீக ஞான யுகமாற்றமாக காணக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–